உ

கடவுள் துணை.

# பழனியாண்டவர் பதிகம்.

இவை.

குயப்பேட்டை.

வீ. இராஜுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

சென்னை.

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

16

உ

கடவுள் துணை.

# பழனியாண்டவர் பதிகம்.

## இரட்டையாசிரிய விருத்தம்.

ஞானகமலிநவரத்ன மகுடமொளிசென்னியும்
காந்திமதி வதனமழகுங்
கருணையுடனன்பருக் கருள்புரியநோக்குமிரு
குஞ்சமலர் விழியினழகும்
விளவியவரன்றனக்குப் பிரணவப்பொருள்
விரித்தகணி வாயினழகும்
பின்னுபொற்குவளை ருத்ராக்ஷமணிமாலிகை
மிலைந்ததிட மார்பினழகும்
மனவலிமையுற்ற சூரன்றனைவதைத்தகூர்
வடிவேற் கரதினழகும்
மங்கைகுற வள்ளிகுஞ் சரியிருமருங்கினும்
மருவுசிங் காரவழகுந்
தினகரன்கிரணபத சேவையுங்கண்டுநான்
றெரிசிக்கவருள்புரிகுவாய்
செம்பதுமராரியயரும்பர்பரவியதுப்ப
தென்பழனி முருகையனே

என்னுளத்தினிலுற்ற சஞ்சலமனைத்தையு
மெடுத்தெடுத்துச் சொல்லியும்

எள்ளளவுகருணையில் லாமற்பராக்கா
யிருப்பதேன் மனதுகல்லோ
அன்னையானவன்மதலை யழுதிடிற்பாற்கொடுத்
தாதரித் திடுவளல்லால்
யாருக்குவந்ததோ வடுதமாங்காயென
வசட்டையுட் கொள்ளுவாரோ
பன்னிருவிலோசனந் தன்னிலொருகடைவிழிப்
பார்வையென் மீதுவைத்தாற்
பானுவைக்கண்டபனி போலவென்கலிபிணி
பறந்திடத் தடையுமுளதோ
தென்னவன்கூன்சுர வியாதியைவிலக்கிய
சிலாக்கியபண்டித லோலனே
செப்பதுமாரியயரும் பர்பரவியதுய்ய
தென்பழனி முருகையனே. 2

ஐயையோவெண்பத்து நான்குலட்சம்பேத
மானஜென் மத்தினுக்குள்
அரிதான மானிடப் பிறவியா யுற்பத்தி
யானதற் கடையாளமாய்த்
துய்யநின்பாதார விந்தகமலங்களைத்
துதிசெய நினைத்தபோதே
சும்மாவிராமலே தன்மானுபவமது
தொடர்ந்துசம் சாரமான
பொய்யுளகவாழ்க்கையை விரும்புதேயல்லாது
பூஜிக்கவிடமில்லையே

புத்தியைமயக்குமச் சித்தினையகற்றியுன்
பொன்னடிக கென்னையாளாய்ச்
செய்யவிதுரகற்றருண மையனேமெய்யனே
செங்கைவடி வேற்கையனே
செம்பதுமரரியய ரும்பர்பரவியதுய்ய
தென்பழனி முருகையனே. 3

வெளியுடையபித்தனைப் போலெனைக்கைதவற்
விட்டுவிடுவது ஞாயமோ
வேலவாவென்றொருக்காற்சொனுலவர்கள்பவ
வினையெலா நீங்கிவிடுமே
வறிஞர்களுனைச்சற்று மனதினில்நினைந்திடின்
மாறுமேயவர்கள்கலியும்
மடமையுடையோருனைத் துதிசெயின்மெஞ்ஞான
மார்க்கமது சித்திக்குமே
நெறியானதெய்வமது நீயலாற்புவியிலொரு
நிஜதெய்வம் வேறுமுளதோ
நீயெனக்காதரவு நானுனக்கடிமையென
நித்தியப் பத்தியுடனே
சிரியவன்செய்தவிண் ணப்பமெல்லாமுனது
திருவுள மறிந்திடாதோ
செம்பதுமரயய ரும்பர்பரவியதுய்ய
தென்பழனி முருகையனே. 4

அன்றுமுருகாவென்றழைத்தவோர் பெண்முன்வந்
தருள்புரிந் தாளவிலையோ

அருணகிரிநாவினி லிருந்துவிளையாடியபவ
ஞதகவிதை பெறவில்லையோ
மன்றிலாடிய சங்கரர்க்கு ப்ரணவமந்த்ர
மகிமையை யுரைக்கவில்லையோ
வானவர்கள் கோமான் றனக்குநவ மணிகொண்ட
மகுடந் தரிக்கவிலையோ
என்றுமுனை நம்பிய வகத்யர்க்கு நன்முத்தி
யீந்து ரக்ஷிக்கவிலையோ
எனபங்கினுச்சுற் றிருந்துபத சேவைதந்
தீடேற்றுவது பாரமோ
தென்றலின் றேர்கொண்ட காமனது மைத்துன
திருநடன மயில்வாகன
செம்பதும ரரியப ரும்பர்பர வியதுய்ப
தெனபழனி முருகையனே. 5

மாடமாளிகையில்லை கூடகோபுரமில்லை
மண்டப விமானமில்லை
மனையாட்டியில்லை மைந்தர்களில்லை கஞ்சிக்கு
வகையில்லை நகையுமில்லை
ஆறிமாடில்லை பணமில்லையுத்யோகமிலை
யரிதான வித்தையில்லை
அங்கத்தைமூடுதற் கான துகிலில்லைநமை
யாதரிப்பவர்களில்லை
பாடுபடவும் கையிலாகவிலை யென்றுபற்
பலமாக வேமயங்கும்

பாழ்மனதை யொருமைப் படுத்தினின்செம்பொற்
பதம்பணிய வருள்செய்குவாய்
தேடரிய கற்பகத் தேவதரு வேஞான
தேவா மகானுபாவா
செம்பதும ரரியய ரும்பர்பர வியதுய்ய
தென்பழனி முருகையனே. 6

வட்டமிட்டுப்பரந் தண்ணார்தெந்தகரி
மத்தகத்தோ டெதிர்த்து
மல்லிகைமலர்ச்செண் டுடன்சண்டை செய்துமதன்
மகுடத்தையுங் கடிந்து
பட்டிகைக்குள்ளடங்காமற் றிரண்டுகும்
பத்தைச்சினந்து விம்மிப்
பம்பரத்தைப்போ லுருக்கொண்டுதேமற்
படர்ந்தமுலை மாதர்வலையிற்
கட்டுண்ண விட்டுமை யற்கடற்குள்ளே
கலந்துபலபேர் நகைக்குங்
காரணம்வராமற் கருத்தைதிரித்தியே
கார்ப்பதுன் கடமைகண்டாய்
சிட்டர்துதிபாதனே துட்டர்குலநாதனே
தெய்வகுஞ்சரி நாதனே
செம்பதும ராயய ரும்பர்பர வியதுய்ய
தென்பழனி முருகையனே. 7

ஓலமிட்டறிய கஜேந்த்ரனிடதைத்தவிர்த்
துய்திடும் வழிமாட்டியும்

உக்ரமுடனே தூணுதைத்த விரணியனையன்
றுடலைப் பிளந்தெறிந்துங்
கோலபாஞ்சாலிக்கு வஸ்திராபரணங்
கொடுத்துமனை சீதைதன்னைக்
கொடுபோன ராவணன்வச்சிரமறுத்துமிகு
கோலாகலங்கள்செய்த
நீலந்றவர்ணனது மருகனேமருவுலவு
நீபமலர் மாலைமார்பா
நின்சமுகமதனில்யான் றஞ்சமெனவந்துமுன்
னெஞ்சம திரங்கவிலையோ
சீலமுடனேயுனது தரிசனந்தருகவே
சித்ரமயிலேறி வருவாய்
செப்பதும ரரியப ருப்பர்பா வியதுய்ய
தென்பழனி முருகையனே 8

அண்டவாதஞ்சூலை மேகமெரிகுன்பனோ
யரையாப்பு வெள்ளை தலைநோய்
அதிசார மூலமுளை துடைவாளை வெட்டைபாண்
டரிசிகங் கிருமலீளை
மண்டையில் வாசுஷிதிமிர் வாதஞ்சிலேட்டும
மகோதரங் குஷ்டரோகம்
மந்தராகாசம் பவுத்திரன் காந்தல்
காமாலை விப்பிரதி வாய்வு
கண்டபதில மாலைநீரழி கன்னப்புத்து
கயரோகம் ராஜவிளவை

கடினசூனியபில்லி வஞ்சனைகளனுகாது
காத்துரட்சித் தருளுவாய்
செண்டுமுலை வாதுகுற வள்ளிமணவாளனே
திடமருவு திண்டோளனே
செம்பதும ரரியய ரும்பர்பர வியதுய்ய
தென்பழனி முருகையனே. 9

அருமறையின் முடிவில்நின்றாடு பொற்பாதனே
யன்பருக் கருள்போதனே
அம்பிகைசுதாகரா வள்ளியின்மனோகரா
யானைமுகனர் சோதரா
மரகதமயூரமிசை வருதணிகைவேலனே
மங்கைகுஞ்சரி லோலனே
மதுரகவி முத்தயன் றமிழாம்புனைந்தபா
மாலைசூடிய பிரானே
கரகமுனிவர்க்கன்று பிரணவசொரூபங்
கடாக்ஷித்த கருணாகரா
கருதியபடிக்குநல் வரமதுகொடுத்தெனைக்
கைதூக்கி யாளல்வேண்டுந்
திரிபுவனகாரண பரமகுணபூரண
தேவாசிறை மீட்டகோவே
செம்பதும ரரியய ரும்பர்பர வியதுய்ய
தென்பழனி முருகையனே. 10

பழனியாண்டவர்பதிகம்-முற்றிற்று.